**கவனிக்க.**-*29.04.2022 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி VI இல் 2022 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்ட நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2278 - 2022 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2022.04.29**

*2278 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 2 |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 3 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, மே மாதம் 20ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மே மாதம் 06ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 082339 - 353 (2022/04)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 255 ஆம் பிரிவுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்ற பிசுக்கால் மூலம் விற்பனை பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தில்

இல.75, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள மக்கள் வங்கி

*வழக்காளி*

வழக்கிலக்கம்: DR/688/20
தன்மை: பணம்
எழுத்தாணை: இலக்கம் 17/21

ஹொரதல் பெலி கெதர பெதும் குமார அபேநாயக, இல. 313, திம்புலான, சிங்கபுர, வெலிகந்த

*எதிராளி*

பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தில் DR/ 688/20 என்ற இலக்க வழக்கில் 2020.07.24ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்வைக்கு ஏற்ப, எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனத்தை தடை ஏற்படுத்தி விற்பனை செய்தல் எழுத்தாணையின் அடிப்படையில் வழக்காளிக்கு வருமதியான ரூபா1,117,429.60 தொகையையும் மற்றும் அத்தகைய தொகையை அறவிடுவதற்காக வழக்காளிக்கு ஏற்படுகின்ற செலவினங்களையும் எதிராளியிடமிருந்து மீட்டுக்கொள்வதற்காக 2021.03.03 ஆந் திகதி பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் மூலம் தடையேற்படுத்தப்பட்ட அத்தகைய வழக்கின் எதிராளிக்கு சொந்தமான கீழே அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனங்களை,

2022 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு அத்தகைய ஆதனங்கள் அமைந்துள்ள இல. 313, திம்புலான, சிங்கபுர, வெலிகந்த என்ற முகவரியில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அட்டவணை**

*தடையேற்றபடுத்தப்பட்டுள்ள ஆதனங்கள்*

1. நாற்காலி 01 மற்றும் சோபா தொகுதி 01
2. சம்சுங் சலவை இயந்திரம் 01
3. சம்சுக் குளிரூட்டி இயந்திரம் 01
4. கொம்ப்ரெசர் 01
5. 24 அங்குல வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி 01
6. ஒலிபெருக்கியுடன் எல்ஜீ வானொலிப் பெட்டி 01
7. பலகை கதிரைகள் தொகுதி 01
8. சோப் வகை தையல் இயந்திரம் 01
9. உணவு மேசை 01, கதிரைகள் 06 (பிளாஸ்திக்)
10. பலகை கெபினட 02
11. தம்ரோ உணவு மேசை 01
12. இரட்டைக் கதவு உருக்கு அலுமாரி 01
13.தரை மின்விசிறி 01
14. பலகை மேசை 01
15. 02 கதவு உருக்கு அலுமாரி 01
16. அதிகுளிர்சாதனப் பெட்டி 01
17. டெஸ்டன் வகை குளிரேற்றி 01
18.அதி குளிர்சாதனப் பெட்டி 01
19. எவ்ரி வகை தரைத் தராசு 01
20.பட்ரி வகை தரை தராசு 01
21. பித்தளை மலர் சாடி 02

*22. பித்தளை வெற்றிலைத் தட்டு 01*
*23.ஒலிக் வகை ஒலிபெருக்கி 02 (ஏம்ப் உடன்)*

பதிவாளர்
ஏ.எஸ். திசாகே,
பிரதிப் பதிவாளர்,
பிரதி பிசுக்கால் /மரணசாசன அலுவலர்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
பொலன்னறுவை.

*04- 730*

---

# நானாவித அறிவித்தல்கள்

## (மேஜர்) பிரதீப் உந்துகொட மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

(மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "(மேஜர் ) பிரதீப் உந்துகொட மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் " எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) வறியோர் அநாதைகள் மற்றும் நோயாளர்களுக்கு வைத்திய நிவாரணம், உணவு, உடை, அத்துடன் உறைவிடங்களை வழங்குதல்;

(ஆ) வறிய பாடசாலைச் சிறுவர்களுக்கென விசேட சேவைகளை நடாத்துதலும் கல்விக்கென புலமைப்பரிசில்கள், நூலக வசதிகள் மற்றும் வேறு அவசியமான ஆதரவு மூலமாக உதவிகளை வழங்குதல்;

(இ) சிரேஷ்ட பிரசைகளின் இயக்கங்களினால் ஆற்றப்படும் சேவைகளுக்கு ஆதரவளித்தலும் ஊக்கமளித்தலும்;

பிறவும்.

(மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய,
பாராளுமன்ற உறுப்பினர்.

*04-837*

---

## (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

(மேஜர்) பிரதீப் உந்துகொட ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "(மேஜர் ) சுதர்ஷன தெனிபிடிய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் " எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) வறியோர் அநாதைகள் மற்றும் நோயாளர்களுக்கு வைத்திய நிவாரணம், உணவு, உடை, அத்துடன் உறைவிடங்களை வழங்குதல்;

(ஆ) வறிய பாடசாலைச் சிறுவர்களுக்கென விசேட சேவைகளை நடாத்துதலும் கல்விக்கென புலமைப்பரிசில்கள், நூலக வசதிகள் மற்றும் வேறு அவசியமான ஆதரவு மூலமாக உதவிகளை வழங்குதல்;

(இ) சிரேஷ்ட பிரசைகளின் இயக்கங்களினால் ஆற்றப்படும் சேவைகளுக்கு ஆதவளித்தலும் ஊக்கமளித்தலும்;

பிறவும்.

(மேஜர்) பிரதீப் உந்துகொட,
பாராளுமன்ற உறுப்பினர்.

*04-838*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.